# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

<u>**பிரதமர் கதி சக்தி தூதுக்குழு இந்தியாவிலிருந்து வருகை**</u>

இந்திய அரசாங்கத்தின் வெளியுறவுத்துறை அமைச்சக ஆலோசகர் திரு அனீஷ் குமார் அவர்கள் தலைமையிலான உத்தியோகபூர்வ தூதுக்குழுவினர் 2024 ஜூலை 8-9 வரை கொழும்புக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். இலங்கையின் பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள் பலரைச் சந்தித்திருந்த இந்த தூதுக்குகுழுவினர் அண்மைய வருட காலங்களில் இந்தியாவின் துரித உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு காரணமாக இருந்த இந்திய பிரதமரது திட்டமான கதி சக்தி (அதிவிரைவு) குறித்து கலந்துரையாடியிருந்தனர். பிரதமரின் செயலாளர் திரு அனுர திசநாயக்க அவர்கள் தலைமையிலான உத்தியோகபூர்வ தூதுக்குழுவினர் மேற்கொண்ட விஜயத்தின்போது பிரதமரது கதி சக்தி திட்டம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

2. இந்நிலையில் இந்திய தூதுக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த இருநாள் விஜயத்தின்போது துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா, பிரதமரின் செயலாளர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், ஜனாதிபதி செயலகத்தில் உட்கட்டமைப்பு திட்டங்களை கையாளும் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் திணைக்களங்கள் பலவற்றின் பிரதிநிதிகளை அவர்கள் சந்தித்திருந்தனர். அத்துடன் சிலோன் வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலும் இத்தூதுக்குழுவினர் பங்கேற்றிருந்தனர். அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பிரதமரின் கதி சக்தி இயங்கு தளத்தின் நன்மைகளை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ள இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாக இத்தூதுக்குழுவினர் இந்த உரையாடல்களின்போது குறிப்பிட்டுள்ளனர்.

3. பிரதமர் கதி சக்தி தளமானது மக்கள் மற்றும் பொருட்களின் இடையறாத இயக்கத்திற்கு பல்மாதிரி, ஆரம்பம் முதல் இறுதி வரையான தொடர்பை உறுதி செய்வதற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக தொழில்நுட்ப ஆதரவைத் தரும் தளமாகும். இது GIS தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதுடன் ஒருங்கிணைந்த திட்டமிடல், ஒத்திசைவான அமுலாக்கம் மற்றும் திட்ட கண்காணிப்பு ஆகியவற்றிற்காக தரவுகளின் அடிப்படையிலான முடிவுகள் எடுக்கப்படுவதனை எளிதாக்குகிறது. திட்டமிடல் செயல்பாட்டில் உட்கட்டமைப்பு திணைக்களங்கள் மற்றும் அமைச்சகங்களை ஒன்றிணைப்பதன் மூலமும், தேசியளவிலான பிரதான திட்டம் (மத்தியமயமாக்கப்பட்ட இயங்குதளம்) மற்றும் மாநில அளவிலான பிரதான திட்டங்கள் (மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களின் தனிப்பட்ட தளங்கள் ) இயற்கை வளங்கள் தொடர்பான GIS தரவு உட்பட அனைத்து தொடர்புடைய உட்கட்டமைப்பு மற்றும் பிற

சொத்துக்களை இணைப்பதன் மூலமும் பிரதமர் கதி சக்தி ஒருங்கிணைப்புகளை முறையே உருவாக்குகிறது.

******************

கொழும்பு
09 ஜூலை 2024